பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி
சென்னை – 4

05-08-2025 TUESDAY 7.15 PM

## ஆகாஷவாணி
## தலைப்புச் செய்திகள்

- பிலிப்பைன்ஸ் அதிபர் உடனான பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக இருந்தது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- உத்தராகண்ட் மாநிலம் உத்தரகாசியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு கவலையளிப்பதாக உள்ளது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

- ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத்துறை மேம்பாட்டிற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் கூறியுள்ளார்.

- எதிர்க்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.

- ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Nisha, Yashika, Vini ஆகியோர் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.

-- இனி விரிவான செய்திகள் –

<<<<<<<>>>>>>>

இந்தியா – பிலிப்பைன்ஸ் இடையே பரஸ்பரம் இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்து அந்நாட்டு அதிபர் திரு Marcos -வுடன் நடத்திய பேச்சுக்கள் ஆக்கப்பூர்வமாக அமைந்தது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், தகவல் தொழில்நுட்பம், சுகாதாரம், வாகன உற்பத்தி, கனிம வளம், விண்வெளி மற்றும் அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்து விவாதிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையே பாதுகாப்புத்துறை ஒத்துழைப்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை வரவேற்பதாக பிரதமர் கூறியுள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையேயான கலாச்சாரத் தொடர்புகளை மேம்படுத்தும் வகையில் சுற்றுலா உள்ளிட்ட துறைகளை மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இருநாடுகளுக்கும் இடையே தூதரக உறவுகள் ஏற்பட்டு 75 ஆண்டுகள் நிறைவடைவதை குறிக்கும் வகையில், சிறப்பு அஞ்சல் தலைகளை இரு தலைவர்களும் கூட்டாக வெளியிட்டனர்.

இந்தியா – பிலிப்பைன்ஸ் இடையே நேரடி விமான சேவையை விரைவில் தொடங்குவது குறித்து ஆலோசனை நடத்தியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, **இந்தியா – ஆசியான் நாடுகள் இடையே தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்திற்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.**

**பாதுகாப்பு, அறிவியல் தொழில்நுட்பம் உள்ளிட்ட ஒன்பது துறைகளில் இருநாடுகளுக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன.**

<<<<<<<>>>>>>

உத்தராகண்ட் மாநிலம் உத்தரகாசியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலர் உயிரிழந்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கிர்கங்கா ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கில் தராலியில் உள்ள விடுதிகள் மற்றும் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வெள்ளத்தில் சிக்கி மாயமானவர்களை தேடும் பணி நடைபெற்று வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் மிகுந்த கவலை அளிப்பதாக உள்ளது என்று குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக, சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், அம்மாநில முதலமைச்சருடன் தாம் தொடர்பு கொண்டு அங்குள்ள நிலைமை குறித்து கேட்டறிந்ததாகவும், மாநில அரசு மீட்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, உத்தரகாசியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மீட்புப்பணிகளை மேற்கொள்வதற்காக இந்தோ – திபெத் எல்லை காவல்படை, தேசிய

பேரிடர் மீட்புப்படையின் நான்கு குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அம்மாநில முதலமைச்சர் திரு புஷ்கர் சிங் தாமி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், மாவட்ட நிர்வாகம், ராணுவம், தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப்படை, பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப்பணிகளை முழுவீச்சில் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று அம்மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>

ஊடகம் மற்றும் பொழுதுபோக்குத்துறையின் வளர்ச்சிக்கு மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் முக்கிய பங்கு வகிப்பதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளின் தகவல் மற்றும் மக்கள் தொடர்பு செயலாளர்களின் தேசிய மாநாட்டை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

பொழுதுபோக்குத்துறையை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக அவர் கூறினார்.

இதற்கென, பத்திரிகை சேவை இணையதளம், இந்திய திரைப்பட மையம், சர்வதேச திரைப்படத் திருவிழா, வேவ்ஸ் பஸார் மற்றும் வேவ்ஸ் உச்சிமாநாடு போன்ற பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார்.

திரைப்படம் மற்றும் ஊடகத்துறையின் வளர்ச்சிக்கான சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், படைப்பாற்றல் துறையில் ஈடுபட்டுள்ளவர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வுகாணும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளளப்பட்டு வருவதாகவும் டாக்டர் எல். முருகன் கூறினார்.

<<<<<<<>>>>>>

**ஜம்மு காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக் உடல்நலக் குறைவு காரணமாக, புதுதில்லியில் இன்று காலமானார். அவருக்கு வயது 79.**

***அவரது மறைவுக்கு குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி, தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட தலைவர்கள் பலர் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.***

***குடியரசுத் தலைவர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், அவரது மறைவு மிகுந்த மனவேதனை அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.***

***அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு குடியரசுத் தலைவர் ஆறுதல் கூறியுள்ளார்.***

***பிரதமர் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், அவரை இழந்துவாடும் குடும்பத்தினருக்கும், ஆதரவாளர்களுக்கும் ஆறுதல் தெரிவித்துள்ளார்.***

***தமிழக முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், ஜம்மு காஷ்மீர் முன்னாள் ஆளுநர் மறைவு தமக்கு வருத்தம் அளிப்பதாக உள்ளது என்று தெரிவித்துள்ளார்.***

***அவர் வகித்த பொறுப்புகள் மற்றும் நிலைப்பாடுகளால் அவர் என்றென்றும் நினைவுகூரப்படுவார் என்று முதலமைச்சர் கூறியுள்ளார்.***

*<<<<<<<>>>>>>*

*எதிர்க்கட்சிகளின் தொடர் அமளி காரணமாக நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் இன்று நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டன.*

*முன்னதாக, மக்களவை இன்று காலை கூடியதும், பீகாரில் நடத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் தொடர்பான பிரச்சினைகள் குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் பிற்பகல் 2 மணிவரை அவை ஒத்திவைக்கப்பட்டது.*

*பின்னர் அவை கூடியதும், எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கோஷங்களை எழுப்பி வந்த நிலையில், அனைத்து பிரச்சினைகள் குறித்தும் விவாதிக்க அரசு தயாராக இருப்பதாக அவைத்தலைவர் கூறினார்.*

*நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவையின் கண்ணியத்தை காக்கும் வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.*

*இதற்கிடையே, எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கு இடையே, கோவா மாநில சட்டப்பேரவைக்கு பழங்குடியினரின் பிரதிநிதித்துவத்திற்கான மசோதா நிறைவேறியது.*

அவைத்தலைவர் பலமுறை கேட்டுக்கொண்ட பிறகும் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் மக்களவை நாள் முழுமைக்கும் ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும், இதே பிரச்சினையை எழுப்பி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் பிற்பகல் இரண்டு மணிவரை அவை ஒத்திவைக்கப்பட்டது.

இதனையடுத்து, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவையின் விதிமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்று மாநிலங்களவை துணைத்தலைவர் திரு ஹரிவன்ஷ் கேட்டுக்கொண்டார்.

மழைக்கால கூட்டத்தொடரில் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் நடைபெறாததற்கு அவர் கவலை தெரிவித்தார்.

கடும் அமளிக்கு இடையே மணிப்பூர் மாநிலத்தில் குடியரசு தலைவர் ஆட்சியை மேலும் ஆறு மாதங்களுக்கு நீட்டிப்பதற்கான தீர்மானம் குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

<<<<<<<>>>>>>>

தமிழக விவசாயிகளின் பாசன தேவைகளை மாநில அரசு நிறைவேற்ற தவறிவிட்டதாக பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நீர்பாசன வசதிகளை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள தனித்துறை விளம்பரத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

எண்ணெய் வர்த்தகம் தொடர்பாக இந்தியா மீது அமெரிக்கா விதித்துவரும் கட்டுபாடுகளுக்கு ரஷ்யா கண்டனம் தெரிவித்துள்ளது.

மாஸ்கோவில் செய்தியாளர்களிடம் பேசிய கிரம்லிங் மாளிகை செய்தித்தொடர்பாளர் திரு திமித்ரி பெஸ்கோ, வர்த்தக கூட்டாளிகளை தேர்ந்தெடுப்பது அந்தந்த நாட்டின் இறையாண்மை தொடர்பான விஷயம் என்று கூறியுள்ளார்.

நாட்டின் நலன்கருதி வர்த்தக தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வது சம்பந்தப்பட்ட நாடுகளின் உரிமை என்று திரு திமித்ரி தெரிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

*ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Nisha, Yashika மற்றும் Vini அரையிறுதிக்கு முன்னேறியுள்ளனர்.*

*பாங்காக்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 54 கிலோ எடைப்பிரிவில், இந்தியாவின் Nisha – உஸ்பெகிஸ்தானின் Milana-வை வென்றார்.*

*51 கிலோ எடைப்பிரிவில் Yashika – உஸ்பெகிஸ்தானின் Alieva -வை வென்றார்.*

*60 கிலோ எடைப்பிரிவில் Vini – கிர்கிஸ்தானின் Adelia -வை வென்றார்.*

--------------

*சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண் சிங் – துருக்கியின் Yanki Erel இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.*

*இந்தோனேஷியாவின் பாலியில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-2 என்ற நேர் செட்டுகளில் இந்தோனேஷியாவின் Lucky Kurniawan – Renaldi Salim இணையை வென்றது.*

*ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சித்தார்த் ராவத் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-1, 6-3 என்ற செட் கணக்கில், ஜப்பானின் Yusuke Kusuhara -வை வென்றார்.*

-------------

*15 வயதுக்கு உட்பட்டோருக்கான தேசிய குத்துச்சண்டை சாம்பியன் போட்டிகள் இம்மாதம் 7-ஆம் தேதி தொடங்கி, 13-ஆம் தேதிவரை நடைபெறவுள்ளது.*

*உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் நடைபெறும் இப்போட்டியில் 700-க்கும் மேற்பட்ட வீரர்கள் பங்கேற்கின்றனர்.*

*<<<<<<<END>>>>>>*